## தமிழ்த்தாய்




இனிமை தமிழ்மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்ந்தநல் அமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு
- பாவேந்தர் பாரதிதாசன்


தமிழ் நாற்றங்கால் பதிப்பகம்
Thamizh Naatragngaal - publication

ISBN 978-0-359-26035-5
9 780359 260355



நான்காம் ஆண்டு பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை
தமிழ் - ஆங்கிலம் - கணிதம் கற்றல், கற்பித்தல் உத்திகள்


# தமிழ் - ஆங்கிலம் - கணிதம் கற்றல், கற்பித்தல் உத்திகள்

நான்காம் ஆண்டு பன்னாட்டுக் கருத்தரங்க
ஆய்வுக் கோவை

**An**
**International Seminar**
**on**
**Tamil – English – Mathematics**
**Strategies of Teaching and Learning**

**By**
**Departments of Tamil – English & Mathematics**
**Date – 10.12.2018**

UNIVERSITY OF MALAYA


**K.S.R College of Arts and Science for Women**
Affiliated to Periyar University - Salem
An ISO 9001:2008 Certified Institution
Tiruchengode.
www.ksrcaswomenarts.edu.in

தமிழ் - ஆங்கிலம் - கணிதம் : கற்றல், கற்பித்தல் உத்திகள்
பதிப்பாசிரியர் : முனைவர் இரா.குணசீலன்,
முனைவர் மு.முரளி

முதற்பதிப்பு : டிசம்பர் – 2018, பக்கங்கள் :232
வெளியீடு : தமிழ் நாற்றங்கால்
நூலாக்கம் & முகப்பழகு :
கவிக்கலைக்கூடம், 324/1–37, இட்டிசேரி,
நாகமுகுந்தன்குடி (அஞ்சல்), இளையான்குடி (தாலுகா),
சிவகங்கை (மாவட்டம்) – 630 702,
தமிழ்நாடு, இந்தியா.
9842123112, ilayavantamil@gmail.com
விலை : ரூ. 250/-

# Tamil – English – Mathematics
## STRATEGIES OF TEACHING AND LEARNING

Author : **Dr R.Gunaseelan**
**Dr M.Murali**

First Edition : December – 2018, Pages : 232
Published By: Tamizh Naatragngaal
Type & Design :
Kavi Kalaikkoodam, 324/1-37, Ittichery,
Nagamugunthankudi (post), Ilayangudi (TK),
Sivagangai (Dist) – 630 702.
Tamil Nagu, India
9842123112, ilayavantamil@gmail.com.
Price : Rs.250/-
ISBN : 978-0-359-26035-5

# பொருளடக்கம்


1. எளிய முறையில் இலக்கணம் கற்றல் - விதிவரு முறை எடுத்துக்காட்டுகளுடன்
இரா.அருணா 21

2. யாப்பருங்கலக் காரிகை – செய்யுளியல் கற்பித்தல் உத்திகள்
முனைவர் கோ.இரவிச்சந்திரன் 29

3. புணர்ச்சி இலக்கணம் கற்பித்தலில் தொழில்நுட்பக் கூறுகள்
முனைவர் கா.இராஜகுமார் 35

4. கணினி வழியில் தமிழ் கற்றல் கற்பித்தல்
சா.இளையராஜா 41

5. ஐபோன் ஸ்டோரில் திருக்குறள் செயலிகள்
இரா.உமாதேவி 46

6. மொழி கற்பித்தலும் அடிப்படைகளும்
முனைவர் நா.கவிதா 51

7. பவணந்தியின் கற்பித்தல் நெறிகள்
முனைவர் உ.கிருஷ்ணன் 59

8. இலக்கணம் கற்றல் கற்பித்தல் முறைகளும் தேவைகளும்
நா. கிருஷ்ணராஜ் 66

9. நிற்க அதற்குத் தக
முனைவர் இரா.குணசீலன் 73

10. பாரதி படைப்புகளைக் கற்பிக்கும் முறைகள்
முனைவர் நா.சங்கரராமன் 80

11. மொழி கற்றலில் கற்பித்தல் உத்திகள்
இரா.சரவணன் 84

12. தமிழ் வழி இலக்கணம் கற்றல் கற்பித்தலில் புதிய உத்திகள்
முனைவர் து. சரஸ்வதி 88

13. கவிஞர் மீராவின் கவிதைகளில் மனிதனாகும்முறை,
முனைவர் யா.சாம்ராஜ் 94

14. தொழில் நுட்பம் வழித் தமிழ் கற்றல் கற்பித்தல்
ச.சித்ரா 99

15. தமிழ் இலக்கியம் (செய்யுள்) கற்பித்தலின் புதிய உத்தி
முனைவர் பெ. சிவஜோதி 103

16. தமிழ் இலக்கியம் கற்றல் கற்பித்தல் உத்திகள்
மு. செல்வி 107

17. இணையத்தின் வழிப் புறநானூறு கற்பித்தல்
செ.சௌந்தர்யா 112

18. இணையங்களின் வழி சங்க இலக்கியம் கற்றல்
செ.தங்கராஜ் 116

19. தமிழ்ச்சூழலில் மொழித்திறன் வளர்ச்சியும் கற்றல் - கற்பித்தலின் போக்குகளும்
இரா.தமிழ்ச் செல்வன 120

20. தமிழ் இலக்கண கற்றல் கற்பித்தல்
செ.தேன்மொழி 126

21. தொல்காப்பிய எழுத்ததிகாரம் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள்
முனைவர் அ. நடராஜன் 131

22. திருக்குறள் கற்றல் கற்பித்தலில் கோட்பாடுகள்
கா.நதியா 138

23. சங்கப் பாடல்களின் வழி மெய்ப்பாட்டினைக் கற்பித்தல்
ப.நர்மதா 142

24. தமிழ் இலக்கணம் கற்பித்தலில் எடுத்துக்காட்டு அணுகுமுறை
முனைவர் க. பன்னீர்செல்வம் 147

25. தமிழ் இலக்கியம் கற்றல் கற்பித்தல்
வெ.பிரவீணா 154

26. ஜவ்வாது மலையும் கற்பித்தலும்
க.மகாராஜன் 159

27. வள்ளலாரின் மரணமில்லா பெருவாழ்வு – கற்றல் நோக்கில்
முனைவர்.பா.மஞ்சுளா 163

28. இலக்கணம் கற்பித்தல் முறைகள்
இரா. மஞ்சுளாதேவி 166

13

# கவிஞர் மீராவின் கவிதைகளில்மனிதனாகும் முறை

**முனைவர் யா.சாம்ராஜ்,**
உதவிப்பேராசிரியர்,
ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரி,
திருப்புத்தூர்,சிவகங்கை மாவட்டம்.

**மனிதனாக வாழக் கற்றுக்கொள்ள கவிஞர் மீராவின் படைப்புகள் நமக்குத் துணை புரிகின்றன என்பதை இக்கட்டுரை விவரிக்கிறது.**

இந்த உலகைப் படைத்த இறைவன் இறுதியில் மிக மிக அழகெனக் கண்டு மகிழ்ந்தது மனிதனை மட்டுந்தான். அவனுக்காகவே படைக்கப்பட்டதுதான் இந்த உலகம். இருந்தும் மனிதன் மனிதனாக இருப்பது வெறும் வார்த்தைகளால் மட்டுமே தவிர அவன் வாழும் வாழ்க்கையில் இல்லை என்பது வேதனைக்குரியது.

பக்குவந்தான் ஒருவனை மனிதனாக்குகிறது. அப்படியெனில் மனிதன் என்றால் என்ன? மனிதனாவதற்கு என்ன தகுதிப்பாடுகள் தேவை? இப்படி அடுக்கடுக்காய் இந்த நவீன அறிவியல் உலகத்திலும் கேட்க வேண்டி இருக்கிறது. குறிப்பாக அறிவியல் வளர வளர மனித மதிப்பீடுகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறது. இவற்றை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது கவிஞர் மீராவின் கவிதைகள்.



**கவிதை என்பது யாதெனில்**

"சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது உரைநடை,சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை" -கோலரிட்ஜ்

"ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப்
பொங்கி வழிவதுதான் கவிதை"

\- வோர்ட்ஸ்வொர்த்

இவ்வாறு கவிதை குறித்து பல்வேறு படைப்பாளர்கள் பலநூறு கருத்துக்களைப் பதிவு செய்திருந்தாலும், அவை மனிதனுக்குப் பயன்பட வேண்டும். நல்ல பல விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் கவிஞனுக்கும் கவிதைக்கும் அழகு சேர்க்கும். அவ்வகையில் 'காகிதத்தில் ஓர் ஆயுதம்' என சமூகத்தை சீர் செய்த தோழர் ஜீவா தொடங்கி அவர் வழி வந்த கவிஞர் மீரா,

"என் எழுதுகோல் தேசம் தழுவும்
பொதுவுடைமைக்கு வரவேற்புரை எழுதும்."
(மீரா - கனவுகள் கற்பனைகள் காகிதங்கள் ப - 21)

எனத் தனது கவதைகளில் புது மாறுதல்களைக் கொண்டு விடியலை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளார். இதுதான் கவிதைக்கான வெற்றியாகும்.

**ஜாதியா? சாதியா?**

திராவிடம் பேசிப் பேசியே மனிதர்களை முட்டாள்களாக்கி அரசியல் ஆதாயத்தைத் தேடிக்கொள்ளும் தமிழகத்தில், சாதியால் ஆங்காங்கே படுகொலைகள் நடந்தேறிக் கொண்டிருப்பதை நேரிலும் செய்தித்தாள்கள் வாயிலாகவும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

"ஜாதி வேண்டும்
என்றால் பொறுமையாய்
இருக்க முடியாது என்னால்
சரியாய்

சாதி வேண்டும்
என்றே சாற்றும்" (மீரா-ஊசிகள். ப-16)

திராவிடம் பேசி பிழைப்பு நடத்தும் வாய்கள் இத்தகைய ஒலி அமைப்புகளால் எவ்வளவு பெரிய வலியை ஏற்படுத்துகிறது என்பதை மீரா பதிவு செய்துள்ளார்.

"மார்கழி மாத விடியல்
குளித்து முடித்துக்
குங்குமப் பொட்டிட்டு
மலம் அள்ள வந்தாள்
தோட்டி மகள்"

(மீரா - குக்கூ. ப-25)

இப்படி மனிதர்களுக்குள்ளே எவ்வளவு பேதங்களைச் சுமந்து அன்றாடம் தங்களின் பிழைப்பை ஓட்ட வேண்டியிருக்கிறது. வெட்கம் வரச் சொன்னால் யாரோ ஒருவனின் மலத்தை ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்கள் அள்ளுவது எவ்விதத்தில் தகும்?. மாதம் ஒரு சமூகம் என்று வைத்துக் கொண்டு மலம் அள்ளும் வேலையைச் செய்து பார்த்தால் நிரந்தரத் தீர்வு கிட்டும் என யோசிக்கச் செய்கிறார் கவிஞர் மீரா. இதனை முன்வைத்தே திண்டுக்கல் கவிஞர் தமிழ்ப்பித்தன் அவர்களும் தனது படைப்பு மூலம் இவ்வாறு பதிவு செய்கிறார்.

"எங்களுக்கு
இட ஒதுக்கீடு வேண்டாம்
வா, வந்து
மலம் அள்ளு" (100 ஹைக்கூ. ப-13)

**கல்வி நிலை**

இளைய தலைமுறை வளர்ச்சி அடையாது மந்த நிலையை நோக்கி பயணிப்பதற்கு இன்றைய கல்விமுறையானது களம் அமைத்துத் தருகிறது. கல்வியால் பலர் காவு வாங்கப்படுவது நம் நாட்டில்தான். கவிஞர் மீரா பள்ளி கல்வித் துறையை நன்கு அறிந்தவர். மிகச் சிறந்த பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தனது கவிதையில் ஆசிரியர்களின் இன்றைய நிலை குறித்து,

"பள்ளி திறந்தது
அ – சொல்லிக் கொடுத்தோம்
தேர்வு வந்தது



சொல்லி முடித்தோம்." (மீரா, ஊசிகள். ப-82)

இவ்வாறு மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதைத் தவிர பள்ளி கல்வித்துறைப் பல்வேறு பணிச் சுமைகளைச் சுமத்தி ஆசிரியர்களைச் சீரழிக்கிறது. உயர்கல்வியில் சொல்லவே தேவையில்லை. 'கல்வியில் சிறந்த தமிழ்நாட்டில்...

"பி.யு.சி யா?
ஒரு நூறு போதும்
பி.எஸ்.சி. பி.எட்.,
இருநூறு ஆகும்
எம்.எஸ்.சி. ஆயிரம்
எம்.பி.பி.எஸ்
ஏழு ஆயிரம்
இங்கே
சேர வாரும்
செகத்தீரே." (மீரா, ஊசிகள். ப-69)

இப்படி கோடி ரூபாயைக் கட்டிப் படிப்பவர்கள் தெருக்கோடிக்கு வந்த நிலையை வரும் நிலையைக் கேலி செய்கிறார்.

**அரசியல் நிலை**

வேறு எந்த நாட்டிலும் இல்லாத ஒரு விசித்திரம் தமிழ்நாட்டில் மட்டுந்தான் தைரியமாய் தலைநிமிர்ந்து நிற்கிறது. புதிது புதிதாய் லெட்டர் பேடு கட்சிகள் தங்களின் முகம் காட்டி புன்னகை செய்கிறது. இதனை,

"எங்கள் நாட்டில்
கட்சிகள் பற்பல
குட்டிகள் போடும் (மீரா,ஊசிகள்.ப-59)

என்னும் கவிதை வழி பதிவு செய்கிறார்.தேர்தலுக்குத் தேர்தல் புதுக் கூட்டணி. தங்களுக்கு சீட் கிடைத்தவுடன் வாக்காளர்கள் வேட்பாளனுக்குக் கடவுளாய் காட்சி தருகிறார்கள். மற்றபடி விதவிதமான முறைகளில் காணிக்கைகளுக்குப் பஞ்சமில்லை. வெற்றி பெற்றுவிட்டால் எழுதப்படாத அரசியல் சாசனம் அரங்கேறும். இதனை,

"குப்பா! குப்பா!
உன்னைப் பெற்ற தந்தைக்கு

உன்னைத்தானே
அடிக்கத் தெரியும்
என்னைப் பெற்ற தந்தைக்கு
இந்த ஊரையே
அடிக்கத் தெரியும்" (மீரா, ஊசிகள்.ப-19)

என்று இன்றைய, நாளைய நடப்பு நிகழ்வுகளை மிக தைரியமாகவே பதிவு செய்துள்ளார்.

"எங்கள் ஊர் எம்.எல்.ஏ
ஏழு மாதத்தில்
எட்டுத் தடவை
கட்சி மாறினார்
மின்னல் வேகம்
என்ன வேகம்?
இன்னும் எழுபது
கட்சி இருந்தால்
இன்னும் வேகம்
காட்டி இருப்பார்...
என்ன தேசம்
இந்த தேசம்?..." (மீரா,ஊசிகள்.ப.19)

தனது சுய லாபங்களுக்கு மட்டுமே இன்றைய அரசியல்வாதிகள் செயல்படுவதை இக்கவிதை காட்டுகிறது. இது நின்றுவிடாது நீளும் வலிமை கொண்டது.

**முடிவுரை :-**

படிப்பில் பல பட்டங்கள் பெறலாம். அறிவின் வழி அறிவியலால் உலகை மாற்றலாம். ஆனால் இந்த உலகில் நான் நல்ல மனிதனாக இருக்கிறேன் என்று யாராலும் சொல்ல முடியாது. ஏனெனில் மனிதனாவது மிகப்பெரிய கடினம். இன்றைய சூழ்நிலையில் எத்தனையோ கொடுமைகள் இருப்பினும் கூட, அரசியல், கல்வி, சாதி போன்ற மிக முக்கிய நிகழ்வுகள் மனித சமுதாயத்தை வாழ விடாது விரட்டி அடிப்பதைப் பார்க்க முடிகிறது. இவற்றிலிருந்து நம்மை விடுவித்து மனிதனாக வாழக் கற்றுக்கொள்ள, கற்பிக்க கவிஞர் மீராவின் படைப்புகள் நமக்கு பேருதவி புரிகின்றன என்பது முற்றிலுமான உண்மையாகும்.